2nd July 1957]

SRI T. P. SRINIVASAVARADAN : I want to bring to the notice of the Hon. the Minister for Education that favourable orders have already been passed and we can grant the concession even in such cases.

Abolition of District Boards.

* 11 *Q.*—SRI A. SUBRAMANYAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal before the Government for the abolition of District Boards and, if so, when a final decision is likely to be taken in the matter?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No, Sir. The latter part of the question does not arise.

SRI A. SUBRAMANYAM : இப்பொழுதுள்ள ஜில்லா போர்டுகளில் குறைபாடுகள் இருக்கின்றன. சில இடங்களில் நிர்வாகம் சரிவர நடைபெறுகின்றது. சில இடங்களில் சரிவர நடைபெறவில்லை. ஆகையால் ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட்டு தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று ஜில்லாவை நான்கு பிரிவாகப் பிரித்து அவைகளை இன்ஸ்பெக்டர்களுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி நியமித்தால் அவர்கள் ரோடு வசதிகளையும், விளக்குகள் வசதிகளையும், பள்ளிக்கூட வசதிகளையும், மற்ற பலவிதமான வசதிகளையும் செய்துகொடுக்க ஏதுவாக இருக்கும் அல்லவா? இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜில்லா போர்டுகள் அப்படியேதான் இயங்கிவரும். அவற்றில் பாகுபாடுகள் கிடையாது. அப்படி இருக்கும் என்று சர்க்கார் நினைக்கவில்லை. இப்பொழுது இயங்கி வருவது போலவேதான் இன்னும் இயங்கிவரும். அப்படி ஏதாகிலும் குறைபாடுகள் இருந்தால், இப்பொழுது அதைக் கவனிக்க ஒரு ஸ்பெஷல் கமிட்டியை நியமித்திருக்கிறோம். அதன் அறிக்கை வந்த பிறகு, அதைப் பற்றி யோசிக்கப்படும். அந்தக் கமிட்டி ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

SRI V. CHAKKARAI CHETTY : என்னுடைய அனுபவத்தில் இந்த ஜில்லா போர்டுகளை அடிக்கடி கலைப்பதும் அதன் பிறகு அவைகளை உயிர்ப்பிப்பதுமாக இருக்கிறது. அதில் என்ன விசேஷம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அவைகள் இருப்பது நன்மையாக இருக்கிறது என்று கருதுவதால்தான் அவைகள் அடிக்கடி உயிர்ப்பித்துக்கொண்டு வரப்படுகின்றன.

SRI A. SUBRAMANYAM : ஜில்லா போர்டின் நிர்வாகம் சில இடங்களில்தான் நன்றாக நடைபெறுகிறது. சில இடங்களில் சரியாக நடைபெறவில்லை. அப்படி சரியாக நடைபெறாத இடங்களில் ரோடு வசதிகள் கிடையாது. மெடர்னிட்டி வசதிகள் கிடையாது. மற்ற எந்த வசதிகளும் கிடையாது. அதனால் அங்கு ஜில்லா போர்டு இருந்தும் பிரயோஜனம் இல்லாமல் இருக்கிறது. அதனால் வேறு ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது அதைக் கலைத்துவிட்டு பஞ்சாயத்து போர்டுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் அல்லவா? அப்படி ஏதாகிலும் உத்தேசம் இருக்கிறதா அல்லது தாலுகா போர்டுகளை ஏற்படுத்த ஏதாகிலும் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜில்லா போர்டுகள் இப்பொழுது ஒரே விதமாகத்தான் இயங்கிவருகின்றன. எந்த எந்த இடங்களில் அவற்றின் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்று கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

இன்றைக்கு ஜில்லா போர்டு எல்லோருக்கும் ஒரே விதமாகத்தான் சலுகைகள் காட்டிவருகிறது. எந்த இடத்தில் குறிப்பாக சலுகைகள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதோ அந்த அந்த இடங்களைக் கவனித்து அதற்கு வேண்டிய எற்பாடுகள் செய்யப்படும்.

3–10 p.m. SRI V. V. RAMASWAMI : ஜில்லா போர்டுகளைத் திருத்தியமைப்பது விஷயமாக ஒரு சப்-கமிட்டி ஆராய்ந்துகொண்டிருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கமிட்டியின் முடிவு எப்பொழுது தெரியும்? இப்பொழுது சில பகுதிகளிலே "யூனியன் ஆப் பஞ்சாயத் போர்ட்ஸ்" என்று பரீட்சார்த்தமாக ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. இப்படி ஏற்படுத்துவது பின்னால் ஜில்லா போர்டுகளை ஒழிப்பதற்கு அடிப்படைத் திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுது ஜில்லா போர்டுகளைத் திருத்தியமைக்க ஒன்றும் ஏற்பாடு செய்யப்படவில்லை. தற்போது இயங்கிவருவது போலவே ஜில்லா போர்டுகள் இயங்கிக் கொண்டிருக்கும். பஞ்சாயத்து போர்டுகளைப்பற்றிய பிரச்னையே இப்பொழுது ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

SRI T. PURUSHOTHAM : May I know whether, in view of the proposed reform of district board administration, the election of members to the district boards due this year will be postponed and if so, for what period?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : For the present, we are considering whether the election can be postponed for one year.

SRI T. PURUSHOTHAM : May I know whether similarly elections to panchayats are also to be postponed?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to correct the impression created. The question of election is under consideration. No final decision has been taken as yet.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE HON. CHAIRMAN *RE* DECISIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held to-day at 2-45 p.m., the following programme was decided :—

" The general discussion on the Budget for the year 1957–58 will conclude on the 5th and the House will be adjourned to meet again on the 22nd July 1957. The programme on and from 22nd July 1957 will be—

22nd July 1957, Monday.	**3 p.m.**	**Presentation of Demands for Grants for Excess Expenditure.**
23rd July 1957, Tuesday, and 24th July 1957, Wednesday.	**3 p.m.**	**Consideration of Government Bills.**
25th July 1957, Thursday.	**3 p.m.**	**Discussion on the Demands for Grants for Excess Expenditure.**
26th July 1957, Friday.	**3 p.m.**	**Consideration and passing of Appropriation Bills."**